இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org
தொலைபேசி எண்: 04254–297981

நாள் 12.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் யானைகள் வழக்கம்போல் நடைபயிற்சி மேற்கொண்டு பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு, சத்து மாத்திரைகள் மற்றும் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி யானைகள் உடல், எடை மற்றும் உயரத்திற்கேற்ப இணைப்பில் கண்ட அட்டவணையின்படி சிறப்பு உணவு வகைகளான கேரட், பீட்ருட் மற்றும் பேரீட்சைபழம் கொடுக்கப்பட்டன. இவைகளை உண்டு யானைகள் ஆனந்தத்துடன் தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. கால்நடை மருத்துவக்குழுவினர் அனைத்து யானைகளையும் தனித்தனியே பரிசோதித்து மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கினர்.








L.N.
SEEDLESS
DATES

கோவை மாவட்டம், பேரூர் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு பட்டீஸ்வரர்சுவாமி திருக்கோயில் கல்யாணி யானை கூந்தபனை எடுத்து சாப்பிடும் போது அதனுடைய வலது பக்க தந்தம் உடைந்துவிட்டது. கால்நடை மருத்துவர் பரிசோதித்து பார்த்ததில் யானைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என தெரிவித்துள்ளார். உடைந்த தந்தத்தின் எடை சுமார் 100கிராம், அதன் நீளம் சுமார் 11 செ.மீ ஆகும். இவ்வலுவலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இத்தந்தமானது நாளை திருக்கோயில் நிர்வாகியிடம் உரிய ஒப்புகை பெற்று ஒப்படைக்கப்பட உள்ளது.



பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன் உடலுக்கு வலுவூட்டும் சத்து மாத்திரைகள் ஆகியவற்றை உட்கொண்ட யானைகள் மாலையிலும் வழக்கம் போல் நடைபயிற்சி செய்து நீராடி தத்தம் இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.